உ
சிவமயம்

# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்
# க.பொ.த. உயர்தரம் முன்னோடிப் பரீட்சை - 2017
# இந்துநாகரிகம்

**நேரம் : 2 மணித்தியாலம்**

## பகுதி – I

**சரியான விடையைத் தெரிவு செய்து புள்ளடியிடுக.**

01) சிவபெருமான் ஆகமங்களை அருளிய இடம்
1. சிதம்பரம் 2. திருக்கயிலாயமலை 3. மகேந்திரமலை
4. சுவாமிமலை 5. தஞ்சைப்பெருங்கோயில்

02) வேதங்களும் ஆகமங்களும் மெய்யானவை எனக்கூறியவர்
1. சம்பந்தர் 2. திருமூலர் 3. மெய்கண்டார்
4. திருவாதவூரர் 5. மாணிக்கவாசகர்

03) சிவனது சதாசிவத்திருமேனி என்பது
1. சகளவடிவம் 2. அருவவடிவம் 3. மகேஸ்வரவடிவம்
4. சிவலிங்க வடிவம் 5. தெட்சணாமூர்த்தி வடிவம்

04) சிவஞானபோத ஆசிரியரும் அதன் சூத்திரங்களும்
1. உமாபதிசிவம் 12 2. மெய்கண்டார் 12 3. அருள்நந்தி 15
4. மறைஞானசம்பந்தர் 15 5. சிவஞானமுனிவர் 12

05) ஆன்மா முத்தி நிலையில் பிரம்மமாகவே இருக்கும் எனக் கூறியவர்
1. சங்கரர் 2. இராமானுஜர் 3. மத்துவர்
4. மீமாம்சகர் 5. மெய்கண்டார்

06) சைவசித்தாந்த நூல்களுள் காலத்தால் முந்தியது
1. திருமந்திரம் 2. சிவஞானபோதம் 3. திருவருட்பயன்
4. கொடிக்கவி 4. திருவுந்தியார்

07) வைஷ்ணவர்கள், சைவர்கள் கோயில் என அழைக்கும் தலங்கள் முறையே
1. ஸ்ரீரங்கம், சிதம்பரம் 2. சிதம்பரம், ஸ்ரீரங்கம்
3. வைகுந்தம், சிவபுரம் 4. திருப்பாற்கடல், கைலாசம்
5. விஷ்ணுகோயில், சிவன்கோயில்

08) ஆணவத்தின் மறுபெயர்கள் அடங்கும் சரியான தொகுதி
1. மூலமலம், சகஜமலம், இருள்மலம்
2. மூலமலம், சகஜமலம், ஆகந்துமலம்
3. சகஜமலம், திரிமலம், இருள்மலம்
4. ஆகந்துகமலம், மாஜாமலம், சகஜமலம்
5. மாயாமலம், கன்மமலம், ஆகந்துகமலம்

09) சைவசித்தாந்தம் கூறும் தடத்தநிலைக்கு ஒப்பாக வேதாந்தம் கூறும் பிரமத்தின் நிலை
1. சகுணப்பிரமம் 2. நிர்க்குணப்பிரமம்
3. நிஷ்பிரபஞ்சநிலை 4. முக்குணப்பிரமம்
5. அகம்பிரமம்

10) அந்தக்கரணங்கள் அடங்கும் தொகுதி

1. மனம், வாக்கு, சுவை, ஒளி
2. மனம், புத்தி, சித்தம், உபத்தம்
3. மனம், பாதம், பாணி, பிருதுவி
4. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
5. லயம், சுருதி, ஞானம், சித்தம்

11) பல்லவர் காலத்தில் குடைவரைக்கோயில் அமைந்த இடங்கள் அடங்குவது

1. மண்டகப்பட்டு, காஞ்சி, தஞ்சை
2. மதுரை, தளவானூர், சீயமங்களம்
3. சீயமங்களம், குடுமியர்மலை, மண்டகப்பட்டு
4. மாமல்லபுரம், காஞ்சி, செஞ்சி
5. தஞ்சை, மதுரை, சிதம்பரம்

12) திருமுறை பாடிய அருளாளர்கள் அடங்கும் தொகுதி

1. சேக்கிழார், திருமூலர், சிறுத்தொண்டர், அப்பர்
2. கபிலர், ஆனாயர், விறண்மிண்டர், பரணர்
3. சுந்தரர், சண்டேஸ்வரர், நக்கீரர், நம்மாழ்வார்
4. சம்பந்தர், பெரியாழ்வார், மங்கயற்கரசியார், திருமூலர்
5. சேந்தனார், சேதிராயர், நக்கீரர், நாவுக்கரசர்

13) காளிதாசரின் நூல்கள் அடங்கும் தொகுதி

1. சாகுந்தலம், இரகுவம்சம், குமாரசம்பவம்
2. சாகுந்தலம், விக்கிரமோர்வசியம், முத்திராட்சம்
3. நீதிசாரம், சிற்பசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம்
4. அர்த்தசாஸ்திரம், தர்மசாஸ்திரம், மானாசாரம்
5. இரகுவம்சம், இராமாயணம், சாகுந்தலம்

14) தமிழ் நீதி நூல்கள் அடங்கும் தொகுதி

1. சுக்கிரநீதி, நல்வழி, ஆத்திசூடி
2. கொன்றைவேந்தன், திருக்குறள், பகவத்கீதை
3. மனுஸ்மிருதி, வர்ணதர்மம், சிலப்பதிகாரம்
4. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி
5. நன்னூல், திருக்குறள், மணிமேகலை

15) அட்டாங்க யோகங்கள் அடங்கும் தொகுதி

1. இயமம், நியமம், சாக்கிரம்
2. அணிமா, மகிமா, கரிமா
3. பிராத்தி, பிராகாமியம், பிராணாயாமம்
4. பிரத்தியாகாரம், தாரணை, நியாயம்
5. தாரணை, தியானம், சமாதி

16) இந்து அறிவியல் நூல்களை எழுதியோர்

1. ஆரியப்பட்டர், வராகிமிகிரர், திருவள்ளுவர்
2. ஔவையார், பாஸ்கராசாரியார், புளிசர்
3. ஆரியப்பட்டர், ஆத்திரேயர், வராகிமிகிரர்

4. மெய்கண்டார், சேந்தனார், நக்கீரர்
5. சம்பந்தர், நம்மாழ்வார், கம்பர்

17) சித்தாந்த அட்டக நூல்கள் அடங்கும் தொகுதி
1. சிவஞானபோதம், திருவுந்தியார், உண்மைவிளக்கம்
2. திருவருட்பயன், கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது
3. சிலப்பதிகாரம், சிவஞானசித்தியார், கொடிக்கவி
4. திருவுந்தியார், வினாவெண்பா, கொடிக்கவி
5. சங்கற்பநிராகரணம், உண்மைவிளக்கம், வினாவெண்பா

18) தயானந்த சரஸ்வதி கண்டித்த விடயங்கள் அடங்குவது
1. விக்கிரக வழிபாடு, சாதியமைப்பு, பசுக்கொலை
2. பலியிடல், மறுபிறப்பு, பசுக்கொலை
3. ஆலயவழிபாடு, விக்கிரகவழிபாடு, அன்னதானம்
4. மறுபிறப்பு, தியான வழிபாடு, பிரமம்
5. பலியிடல், பசுக்கொலை, வேட்டல்

19) மௌரியவம்சத்தின் கடைசிமன்னனாக விளங்கியவன் யார்?
1. பிருகத்திரன் 2. சந்திரகுப்த மௌரியன் 3. தேவானாம்பிய
4. கனிஷ்கன் 5. வேமோகட்பீசிஸ்

20) குப்தர்காலத்தில் அரச சின்னமாக விளங்கியது
1. நந்தி 2. கருடன் 3. வேல்
4. சிங்கம் 5. புலி

21) இந்துக்களின் வாழ்வில் பயன்படுத்திய கணிதத் துறைகள்
1. அட்சரகணிதம், எண்கணிதம் 2. ஆரீயப்பட்டீயம், எண்கணிதம்
3. பிரயோக கணிதம், எண்கணிதம் 4. அட்சரகணிதம், கல்பசூத்திரம்
5. பௌதீக கணிதம், அட்சர கணிதம்

22) பூஜ்ஜியம் எண்ணிலி என்பவற்றின் தத்துவங்களை தெளிவாக விளக்கியவர்
1. போதாயனர் 2. ஆரியப்பட்டர் 3. பௌதாயனர்
4. பாஸ்கராசாரியார் 5. வராகமிகிரர்

23) திருநீற்றை மூன்று குறியாக அணியும் முறையின் பெயர்
1. முக்குறி தரித்தல் 2. உத்தூளனம் 3. திரிபுண்டரம்
4. திருநீறுதரித்தல் 5. முழுநீறுதரித்தல்

24) குமாரக்கடவுளைப் போற்றிப் பாடிய தமிழ்காப்பியம்
1. திருப்புகழ் 2. குமாரசம்பவம் 3. கந்தர் அலங்காரம்
4. கந்தர அந்தாதி 5. கந்தபுராணம்

25) சோழர் காலத்தில் புகழ்பெற்ற மருத்துவமனையாக விளங்கியது யாது?
1. தஞ்சைப்பெரியகோயில் மருத்துவமனை
2. தஞ்சை சுந்தரச்சோழன் ஞாபகாரத்த மருத்துவமனை
3. ஸ்ரீரங்கம் சித்தமருத்துவ மருத்துவமனை
4. தஞ்சை தன்வந்திரி மருத்துவமனை
5. மதுரை இராஜராஜ சோழன் மருத்துவமனை

26) 1815ஆம் ஆண்டு இராஜாராமால் உருவாக்கப்பட்ட சபையின் பெயர் யாது?

1. ஆரிசமாஜம் 2. சைவபரிபாலனசபை 3. பிரமசமாஜம்
4. இராமகிருஷ்ணமிஷன் 5. ஆத்மீகசபை

27) சுத்தி, சங்கம், கல்வி எனும் தாரக மந்திரத்தின்படி தொழிற்பட்டவர் யார்?

1. இராஜாராம் மோகன் 2. தயானந்தசரஸ்வதி
3. இராமகிருஷ்ணபரமஹம்சர் 4. அன்னை சாரதாதேவி
5. சுவாமி விவேகானந்தர்

28) இராமகிருஷ்ணமிஷன் வெளியிடும் மாதாந்த சஞ்சிகைகளில் சரியானது

1. தர்மசக்கரம், ஆரியமித்திரன்
2. தர்மசக்கரம், இராமகிருஷ்ணன்
3. இராமகிருஷ்ண விஜயம், சுதேச மித்திரன்
4. சைவ உதயபானு, இந்துசாதனம்
5. இராமகிருஷ்ண விஜயம் தர்மசக்கரம்

29) இந்துக்கள் கிறீஸ்தவர்களாக மதமாற்றப்பட்ட வேளை அவர்களை மீண்டும் இந்து தர்மத்தைக் கடைப்பிடிக்க மேற்கொண்ட சடங்கு

1. சுத்தி 2. சத்தியம் 3. தீட்சை 4. தீமிதிப்பு 5. சுத்தம்

30) சுவாமி விபுலானந்தரின் தீட்சாநாமம்

1. மயில்வாகனம் 2. பிரபோதசைதன்யர்
3. குடிராம் சட்டர்ஜி 5. இராமானந்தர்
5. பரமானந்தர்

31) ஆகந்துகமலம் என சைவசித்தாந்தம் அழைக்கப்படுவது எதனை

1. ஆணவம், கன்மம் 2. கன்மம், மாஜை
3. ஆணவம், மாஜை 4. மாஜை, திரோதானம்
5. ஆணவம், திரோதாயி

32) திரிமலத்தார் என அழைக்கப்படுபவர்கள்

1. சகலர் 2. பிரளயாகலர் 3. விஞ்ஞானகலர்
4. சதாசிவன் 5. சகளர்

33) சிவன் பாசங்களால், மலங்களால் பீடிக்கப்படாதவன் என்பதனால் சிவனுக்கு பொருத்தமில்லாத பெயர்

1. நிர்மலன் 2. நிமலன் 3. விமலன்
4. கமலன் 5. அனாதிமுத்தன்

34) உலகில் எழுந்த சமயதத்துவங்களில் மேன்மைக்குரியது சைவசித்தாந்தமே எனக்கூறியவர்

1. மக்ஸ்முல்லர் 2. B.C.பிறவுண் 3. பரணவிதான
4. ஜோண்மார்சல் 5. G.U.போப்

35) சிவனோடு ஆன்மாக்கள் பிரிவின்றிக் கலக்கும் முத்தி எது?

1. விஷிட்டாத்வைதம் 2. சிவசாயுச்சியம் 3. சிவசாரூபம்
4. சிவசாலோகம் 5. சிவசாமீபம்

36) ஆலயங்களில் காணப்படும் இராஜகோபுரங்கள் யாருடைய காலத்தில் அப்பெயர் பெற்றது?

1. இராஜசிம்மன் காலம் 2. இராஜராஜசோழன் காலம் 3. இராஜேந்திரன் காலம்
4. அநபாயச்சோழன் காலம் 5. கிருஸ்ணதேவராயர்காலம்

37) சப்த இசைத்தூண் காணப்படும் ஆலயம்

1. தஞ்சை 2. மதுரை 3. சிதம்பரம்
4. காசி 5. காஞ்சி

38) கிறிஸ்தவ மதத்தினரின் பிரசாரங்களுக்கு எதிரான கண்டன நூல்களை எழுதிய பெருமைக்குரியவர்

1. ஆறுமுகநாவலர் 2. சுவாமிவிபுலானந்தர் 3. சிவபாதசுந்தரனார்
4. செந்திநாதையர் 5. சபாபதி நாவலர்

39) ஈழத்தில் சதுர்வேதி மங்கலங்கள் காணப்பட்ட இடங்கள்

1. நல்லூர், வல்லிபுரம் 2. பொலநறுவை, கந்தளாய்
3. கந்தளாய், அனுராதபுரம் 4. திருக்கேதீஸ்வரம், கீரிமலை
5. மாமாங்கம், கண்டி

40) சைவபரிபாலனசபையால் வெளியீடு செய்யப்பட்டு வரும் சைவத்தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளின் பெயர்கள்

1. சிவதொண்டன் Sivathondan
2. இந்துசாதனம் Hindu Organ
3. ஞானச்சுடர் Gnacchudar
4. சைவநாதம் Saiva Sound
5. இந்து ஒளி Hindu Oli

பின்வரும் பகுதிகளில் தரப்பட்ட சொற்களின் தொடர்பை கொண்டு 41 – 45 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| ராஜகர்மாணி | கபீர்தாஸர் | இராமானந்தர் | கொன்றைமரம் | உஷை |
| F | G | H | I | K |
| விஷ்ணு | பூலோகநாயகி | சேந்தனார் | பௌஷ்டிகாணி | விஷ்ணுசித்தர் |
| | | | | |

41) வேதங்களோடு தொடர்புபட்ட தெய்வங்கள்

1. FE 2. AC 3. GF 4. EK 5. BF

42) வடநாட்டு பக்தி நெறியாளர்கள் இருவர்

1. CH 2. BC 3. KH 4. FK 5. CF

43) ஒட்டுசுட்டான் தான்தோன்றியீஸ்வரரோடு தொடர்புடையவை

1. CF 2. CH 3. GH 4. BC 5. GD

44) அதர்வண வேதத்தோடு தொடர்புபட்டது

1. AI 2. BG 3. CH 4. FI 5. EF

45) பல்லாண்டு பாடியவர்கள்

1. BC 2. KF 3. CF 4. KH 5. HC

பின்வரும் கூடுகளில் தரப்பட்ட விடயங்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை அ, ஆ, இ, ஈ, உ, ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்து அவ் எழுத்துக்கள் அடங்கும் தொகுதியைக் குறிப்பிடுக.

| அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|
| A | B | C | D | E |
| மெய்கண்டார் | காலடி | பூம்பாவை | அச்சுதகளப்பாளர் | பரஞ்சோதி முனிவர் |
| G | H | I | K | L |
| திருஞானசம்பந்தர் | சிவஞானபோதம் | சிகாகோ | பத்மபாதர் | காசிவாசி |
| M | N | O | P | R |
| ஆதிசங்கரர் | இராமகிருஷ்ண மிஷன் | சுவேதவனப் பெருமாள் | சைவவேதாந்தம் | புகலியர்கோன் |
| S | T | U | V | W |
| செந்திநாதையர் | பகவதி அம்மையார் | தேவாரம் வேதசாரம் | நவயுக சங்கரர் | லிங்காஷ்டகம் |
| X | Y | Z | F | Q |
| வீரத்துறவி | குப்பிளான் | சிவகுரு | யாழ்முரிப்பண் | நரேந்திரன் |

46) திருமுறைகளோடு தொடர்புடைய தொகுதி

1. GTCFR    2. GTCEZ    3. GHCLR .
4. TZFRG    5. MTSUF

47) சைவசித்தாந்த சாத்திரங்களோடு தொடர்புடையவர் அடங்கும் தொகுதி

1. SHUFE    2. AHCDE    3. AHODE
4. AHOKE    5. MOUDW

48) வேதாந்தியோடு தொடர்புடைய தொகுதி

1. MBZKW    2.MKZVW    3. XNUZV
4. MNIKQ    5. XYVKI

49) சைவசித்தாந்தத்தை வளர்த்த யாழ்ப்பாணத்தவரோடு தொடர்புடையவர் அடங்கும் தொகுதி

1. SYLPZ    2. AHUPV    3. SYULP
4. MYUPL    5. SYFLE

50) பத்தொன்பதாம் நூற்றாண்டு சீர்திருத்தவாதியுடன் தொகுதி

1. XNIVQ    2. QXVIP    3. SYLPZ
4. MBZKN    5. XYVRI

**இந்துநாகரிகம்** **நேரம் : 3 மணித்தியாலம்**

**பகுதி - II**

**பகுதி ஐ ல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் பகுதி II ல் இருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பகுதி - I**

01) சிவாகமங்கள் இந்துநாகரிகத்தை வளம்படுத்தியவாற்றை மேல்வரும் விடயங்கள் அடிப்படையில் விளக்குக.

1. ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்
2. சைவசித்தாந்த சிந்தனைகள்
3. ஆலயக் கிரியைகளும் அனுட்டானங்களும்
4. ஆகமங்களின் முக்கியத்துவம்

(4+5+5+6=20 புள்ளிகள்)

02) இந்து சமுதாயத்திற்கு அறம் கூற எழுந்த இலக்கியங்களே இதிகாசங்களாகும். இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

1. இதிகாசம் என்பதன் பொருள், இலக்கியங்களும் ஆசிரியர்களும்
2. இதிகாசம் கூறும் சமய, அறக்கருத்துக்கள்
3. இந்துநாகரிக வளர்ச்சியில் இதிகாசம் பெறும் செல்வாக்கு

(6+6+8=20 புள்ளிகள்)

03) மத்துவர் வேதாந்தம் ஒரு தத்துவக் கோட்பாடாக உருவாகியதை மேல்வருவன கொண்டு விளக்குக.

1. அளவைப் பிரமாணங்களும், பிரமாண நூல்களும்
2. மத்துவர் கூறும் உலகம் பற்றிய கொள்கை
3. மத்துவர் கூறும் பிரமம்

04) தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு செல்வாக்கு பெற்றவாற்றை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

1. இந்து இலக்கியங்களின் செல்வாக்கு
2. கோயில்களும் கலை மரபுகளும்
3. இந்துசமயச் சடங்குகள்

(6+6+8=20 புள்ளிகள்)

05) இந்து தத்துவ சிந்தனைகளின் கருவூலம் உபநிடதம் என்பதனை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

1. உபநிடதம் விளக்கும் பிரதான உபநிடதங்கள்
2. உபநிடதம் கூறும் ஆன்மா
3. உபநிடதம் இந்து தத்துவங்களின் கருவூலம்

(6+6+8=20 புள்ளிகள்)

06) நாயக்கர்கால கலை மரபுகளின் சிறப்புக்களை ஆராய்க.
சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாவின் வகை இயல்புகளைக் கூறி ஆன்மா முத்தியடைவதற்கான வழிமுறைகளையும் ஆதாரம் காட்டி விளக்குக.

(20 புள்ளிகள்)

07) பின்வருவனவற்றில் ஏதாவது நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. திருக்கோணேச்சரம்
2. புருடார்த்தங்கள்
3. தெட்சணாமூர்த்தி
4. இசைக்கலை
5. ஞானப்பிரகாச சுவாமிகள்
6. சைவவித்யா விருத்திச் சங்கம்

(4x5=20 புள்ளிகள்)

The National e-Learning Portal - The General Education

# க.பொ.த. உயர்தரம் மாதிரிப் பரீட்சை - 2017
## இந்துநாகரிகம்
## புள்ளித்திட்டம்

### பகுதி - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 3 | 21 | 1 | 31 | 2 | 41 | 1 |
| 2 | 2 | 12 | 5 | 22 | 4 | 32 | 1 | 42 | 2 |
| 3 | 4 | 13 | 1 | 23 | 3 | 33 | 4 | 43 | 3 |
| 4 | 2 | 14 | 4 | 24 | 5 | 34 | 5 | 44 | 4 |
| 5 | 1 | 15 | 5 | 25 | 2 | 35 | 2 | 45 | 5 |
| 6 | 4 | 16 | 3 | 26 | 5 | 36 | 5 | 46 | 1 |
| 7 | 1 | 17 | 2 | 27 | 2 | 37 | 2 | 47 | 3 |
| 8 | 1 | 18 | 1 | 28 | 5 | 38 | 1 | 48 | 1 |
| 9 | 1 | 19 | 1 | 29 | 3 | 39 | 2 | 49 | 3 |
| 10 | 4 | 20 | 2 | 30 | 2 | 40 | 2 | 50 | 1 |

(50x2=100 புள்ளிகள்)

### பகுதி - II

The National e-learning Portal for The General Education